# தற்காலக் கவிஞர்கள்

***கோ. எவாஞ்சிலின் ஜோன்ஸ் ஜாய்***
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7904

***முன்னுரை***
*இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி எனலாம். தற்கால இலக்கியக் கவிஞர்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை, கண்ணதாசன் ஆகியோர் நாட்டு நலனுக்காக எவ்வாறாக அரும்பாடுபட்டனர் என்பதை நாம் அறிகிறோம். தமிழ்மொழிமீது தீராதக் காதல் உணர்வுடன் திகழ்ந்தனர் என்பதை அறிகிறோம். நாடு முழுவதும் சாதி சமய வேறுபாடு இன்றி ஒற்றுமையுடன் காணப்பட அவர் கையாண்ட முயற்சிகளை நாம் அறிகிறோம்.*

***பாரதியார்***

இவர் பிறப்பு *1882*. இறப்பு *1921*. இயற்பெயர்; சுப்பிரமணியன். ஏட்டயபுரத்தில் சின்னசாமி அய்யர், இலக்குமி அம்மையாருக்கு மகனாய்ப் பிறந்தார். பாரதியின் சுயசரிதையே தமிழில் தோன்றிய முதல் சுய சரிதமாகக் கருதப்படுகிறது. இவரது “ஞானரதம்’ முதல் உரைநடைக் காவியமாகும். நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்போதும் சோராதிருத்தல் என்று வாழ்ந்து மக்களுக்காகக் கவிதை எழுதினார். இந்தி, ஆங்கிலம், லத்தீன், சமஸ்கிருதம், பிரெஞ்ச், வங்காளம், ஐர்மன் போன்ற பல மொழியிலும் புலமை பெற்றிருப்பினும் தமிழ் மொழிணீயில் மிகுந்த ஈடுபாட்டுடன் காணப்பட்டதை,

**யாமறிந்த மொழிகளிலேல தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்**

என்ற இப்பாடல் வாயிலாக அறியலாம். நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்தார். இவரது விடுதலை உணர்ச்சிக்கு வ.உ.சிதம்பரம்பிள்ளை, திலகர் முதலானோர் உரமிட்டனர். அதன் விளைவாகவே பாரதியார்,

***ஆடுவோமே பள்ளு பாடுவோமே***
***ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே***

என்று விடுதலைப்பாடல் பாடியுள்ளார். அது மட்டுமல்ல பாமரர் மத்தியிலும் தேசிய உணர்வு தூண்டும் படியாக,

***என்றும் தணியும் இந்தச் சுதந்திர தாகம்***
***என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்***

என்ற பாடல் வாயிலாக பாமர மக்களை தட்டி எழுப்புகின்றார். மேலும் பெண்கள் முன்னேற்றச் சிந்தனையை தூண்டுகின்றார். சமய ஒருமைப்பாட்டுச் சிந்தனையையும், சாதி ஒருமைப்பாட்டுச் சிந்தனையையும் உருவாக்கியுள்ளார் என்பதை,

**பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்**
**பேமைமை அற்றிடும் காணீர் என்றும்**
**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று: இதில்**
**பற்பல சண்மைகள் வேண்டாம் என்றும்**
**சாதிக்கொடுமைகள் வேண்டாம் அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்**

என்ற இப்பாடல் வாயிலாகக் காட்டியுள்ளார்.

**பாரதிதாசன்**

இவர் பிறப்பு 1891. இறப்பு 1964. இயற்பெயர்; கனகசுப்புரத்தினம்;. இவரது படைப்புகளான பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், தமிழியக்கம், காதல் நினைவுகள், இருண்ட வீடு, குடும்ப விளக்கு, நல்ல தீர்ப்பு, இசையமுது, காதலா கடமையா, இளைஞர் இலக்கியம். குடும்ப விளக்கை ஒரு குறள் ஓவியம் எனலாம். குறட்கருத்துக்களை உள்ளகத்தே கொண்டு குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை இணைத்து நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்ற கருத்தைப் படிப்போர் உள்ளத்தில் ஓவியமாகத் தீட்டுகிறார். நல்ல குடும்பத்தின் அமைதியான இன்ப வாழ்வைக் குடும்ப விளக்கில் காட்டிய கவிஞர், அன்பான குடும்பத்திற்கு ஆகாதவற்றை இருண்ட வீட்டில் கற்பனை செய்து காட்டுகிறார். தமிழ்மீது உள்ள ஈடுபாட்டை,

**தமிழுயர்ந்தால் தமிழ்நாடு**
**தானுயரும் அறிவுயரும்**
**அறமும் ஓங்கும்**
**இமயமலை போலுயர்ந்த**
**ஒரு நாடும் தன் மொழியில்**
**தாழ்ந்தால் வீழும்**

என்று தமிழ்போற்றத் தமிழைத் தட்டி எழுப்புகிறார் பாரதிதாசன். பாரதியார் கவிதைகளில் கொண்ட ஈடுபாட்டால் தன் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். பெண் முன்னேற்றம், பொதுவுடைமை, மூடப்பழக்க எதிர்ப்பு முதலான கொள்கைப் பாடல்களின் மூலம் புரட்சிக் கவி எனப் போற்றப்படுகிறார். பாரதியின் முதல் அறிமுகத்தில் "பாடு" எனக் கேட்க உடனடியாகப். பாரதிதாசன்,

**எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி**
**ஏழுகடல் அவள் வண்ணமடா**

என்ற இப்பாடல் வாயிலாக தமது கவிப்புலமையை வெளிக்காட்டியுள்ளார். பெண்கள் இந்நாட்டின் கண்கள் என பெண்களை மேம்மைபடுத்தியுள்ளதை,

**கல்விஇல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல்இல்லை**
**கல்வியைஉடைய பெண்கள் திருந்தியகழனி அங்கே நல்லறிவுடைய மக்கள் விளைவது நவிலவோநான்**

என்ற பாடல் வாயிலாக கல்வி இல்லா பெண்கள் களர்நிலத்துக்கு ஒப்புமைப்படுத்தியும், கல்வியை உடைய பெண்களிடத்தில் நல்லறிவுடைய மக்கள் பிறப்பார்கள் என்பதையும் காட்டியுள்ளார். மேலும் விதவை மறுமணத்தை ஆதரித்தார் என்பதை,

**வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால் பின்மணத்தல் தீதோ**

என்ற இப்பாடல் வாயிலாக கணவனை இழந்த பெண் மறுமணம் செய்வதில் எவ்வித தவறுமில்லை என்று அவர் கூறுவதை அறிய முடிகிறது.

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**

இவர் பிறப்பு 1876. இறப்பு 1954. இவரது படைப்புகளான நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச்

செல்வம், கீர்த்தனைகள். கவிமணியின் பாடல்கள் "மலரும் மாலையும்" என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளது. ஏட்வின் ஆர்னால்டு எழுதிய நூலைத் தழுவி ஆசியNஜாதி என்னும் பெயரில் மொழியாக்கம் செய்துள்ளார். சென்னை மகாணத் தமிழ்ச் சங்கம் "கவிமணி" என்னும் பட்டத்தைக் கொடுத்து சிறப்பித்தது. குழந்தைச் செல்வங்களை மகிழ்விக்கும் வண்ணமாக "மலரும் மாலையும்' என்ற நூலில் மிக அருமையாகக்கருத்தைக்கையாண்டுள்ளார் என்பதை,

**தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே**
**துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி**
**அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்**
**அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி**
**நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை**
**நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி:**
**முத்தங் கொடுக்குது வெள்ளைப்பசு - மடி**
**முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி**

என்ற இப்பாடல் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் ஆசியமீஜாதியில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை புத்தர் ஏழைச்சிறுவனுக்கு அறிவுறுத்தியப் பாடலாக,

**ஓடும் உதிரத்தில் - வடிந்து**
**ஒழுகும் கண்ணீரில்**
**தேடிப் பார்த்தாலும் - சாதி**
**தெரிவதுண்டோ அப்பா?**
**எவர் உடம்பினிலும் - சிவப்பே**
**இயற்கைக் குணமப்பா!**
**பிறப்பினால் எவர்க்கும் உலகில்**
**பெருமை வராதப்பா**
**சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**
**செய்கை வேண்டுமப்பா**

என்ற இப்பாடல் வாயிலாக உடம்பில் ஓடும் இரத்திலோ அல்லது கண்ணில் இருந்து ஒழுகும் கண்ணீரிலோ சாதியைக் காண முடிந்ததா? இல்லை. ஏல்லாருடைய உடம்பிலும் ஓடும் இரத்தம் சிவப்பு நிறமே எல்லாருடைய கண்ணீரும் உவர்ப்புத் தன்மை உடையது. ஆதலால் பிறப்பால் எவர்க்கும் பெருமை வராது. சிறப்பு வரவேண்டுமென்றால் நாம் நம்மால் முடிந்த அளவு மற்றவர்க்கு நல்ல செயல்கள் செய்ய வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்

**நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை**

இவர் பிறப்பு 1888 இறப்பு 1972. இவர் வேங்கடராமப்பிள்ளை அம்மணி அம்மாவின் அருந்தவப் புதல்வர். இவரது படைப்புகளான "அவனும் அவளும்" இவர் எழுதிய காப்பியமாகும். சங்கொலி, தமிழ்த்தேர் முதலானவை இவரது கவிதைத் தொகுப்புகள். தமிழன் எப்படிப்பட்டவன், எத்தகைய பெருமை வாய்ந்தவன் என்று படம்பிடித்துக் காட்டும் ஓர் அருமையான பாடல்,

**தமிழன் என்றோர் இனமுண்டு**
**தனியே அவர்க்கோர் குணமுண்டு**
**அமிழ்தம் அவனுடைய மொழியாகும்**
**அன்பே அவனுடைய வழியாகும்**
**மானம் பெரிதென உயிர் விடுவான்**
**மற்றவர்க்காகத் துயர் படுவான்**
**தானம் வாங்கிடக் கூசிவிடுவான்**
**தருவது மேல் எனப் பேசிடுவான்**

என்ற இப்பாடல் வாயிலாக அன்புள்ள வாழ்க்கை வாழ்ந்து, கனிவான வார்த்தைப் பேசி, மற்றவரிடத்தில் எதையும் வாங்க வெட்கப்படுதலும், மற்றவர்க்கு வழங்குவதை மேன்மையாகவும் கருதுவான் தமிழன் என்பதை அறியலாம். திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது என மூதறிஞர் இராசகோபால் உரைக்கிறார். காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுகிறார். வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது காந்தியைக் குறித்து,

**கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்**

எனப் பாடியது இவரைக் காந்தியவாதியாக அடையாளப்படுத்தியது.

**கண்ணதாசன்**

இவர் பிறப்பு 1927. இறப்பு 1981. இயற்பெயர்; முத்தையா. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகூடற்பட்டியில் சாத்தப்பன் - விசாலாட்சி என்பவருக்கு மகனாய்ப் பிறந்தார். உயர்ந்த தத்து வங்களை எளிய சொற்களில் அழுத்தமாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் கண்ணதாச னின் பாடல்களில் கரைபுரண்டு ஓடுகிறது. ஆயிரக்கணக்கான திரை இசைப் பாடல்கள் மட்டுமின்றி இலக்கியமாய்ப் போற்றத்தக்க பல பாடல்களையும் பாடியுள்ளார். அவருடைய் கவிதைகள் "கண்ணதாசன் கவிதைகள்" என்னும் பெயரில் ஆறு தொகுதிகளாக வெளிவந்து ள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி ஆகியன இவரது குறுங்காப்பியமாகும். சேரமான் காதலி என்பது இவரது புதின நூல் ஆகும். இந்த நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது. வாழ்நாள் இறுதியில் இயேசு காவியம் என்னும் நூலை எழுதித் தன் வாழ்வை நிறைவாக்கினார். "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம்" என்னும் பாடலின் வழி அனைவருக்கும் தன்னம்பிக்கை ஊட்டியவராகத் திகழ்ந்தார். மேலும் அவரது இலட்சியம் புலப்படும் காட்சியாக,

**போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்**
**தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்**
**ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்**
**எடுத்துரைப்பேன்! எவர் வரினும்**
**நில்லேன் அஞ்சேன்**

என்னும் வரிகளில் கவிஞரின் இலட்சியக் குரல் உரத்து ஒலிக்கிறது. நேரு மறைந்த போது கவியரசு பாடிய கையறுநிலைப் பாடலாக,

**சாவே உனக்கொரு நாள்**
**சாவு வந்து சேராதோ**
**சஞ்சலமீமு நீயுமொரு**
**சஞ்சலத்தைக் காணாயோ!**
**தீயே உனக்கொரு நாள்**
**தீ மூட்டிப் பாராமோ**
**தெய்வமே உன்னையும் யாம்**
**தேம்பிறழ வையோமோ**

என்னும் அடிகள் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் தன்மையனவாய் உள்ளன. சோகத்தில் கண்ணதாசனின் கவித்துவம் மிக உயராமான சிகரங்களை எட்டுகிறது என்பதில் ஐயமில்லை

**முடிவுரை**

நாட்டு முன்னேற்றத்திற்காக உழைத்த நம் முன்னோர்களின் நல்ல நடத்தையைப் பின்பற்றி நாமும் நல்வழியில் நடக்க முயல்வோம். தாய் மொழியைப் போற்றுவோம். தமிழ் மொழியைப் போற்றி ஆதரிப்போம். தமிழுக்காக வாழ்வோம். தமிழால் வளர்வோம்.